தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066


dinakani2023@gmail.com
RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI
www.dhinakani.com
காலை நாளிதழ்




Vol: 02 | Issue: 254 | 4 Pages | 12.4.2025 | Saturday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825
மலர்: 02 | இதழ்: 254 | 4 பக்கங்கள் | 12.4.2025 | சனிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825



**தவமுந் தவமுடையார்க் காகும் அவமதனை**
**அஃதிலார் மேற்கொள் வது**

**விளக்கம்:**
தவக்கோலமும் தவஒழுக்கமும் உடையவர்க்கே பொருந்துவதாகும்; அக் கோலத்தை தவஒழுக்கம் இல்லாதவர் மேற்கொள்வது வீண்முயற்சியாகும்.

## டொமினிகன் குடியரசு கேளிக்கை விடுதி விபத்தில் பலி எண்ணிக்கை 113 ஆக உயர்வு



சாண்டோ டொமிங்கோ, ஏப்.12

கரீபியன் தீவு நாடான டொமினிகன் குடியரசு நாட்டின் சாண்டோ டொமிங்கோவில் பிரபல இரவு கேளிக்கை விடுதியான 'ஜெட் செட்' என்னும் விடுதி அமைந்திருந்தது. இந்த விடுதிக்கு உள்ளூரை சேர்ந்தவர்கள் மட்டுமின்றி வெளிநாடுகளில் இருந்து வரும் சுற்றுலா பயணிகளும் அதிகளவில் கூடுவார்கள்.

அந்த விடுதியில் இசை கச்சேரி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிலையில் ஏராளமானோர் அங்கு கூடினர். அரசியல் பிரமுகர்கள், பேஸ்பால் விளையாட்டு வீரர்கள் உள்பட பிரபலமானவர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர். நேற்று அதிகாலையில் இசை கச்சேரியில் பொதுமக்கள் திளைத்து கொண்டிருந்த வேளையில் திடீரென விடுதி மேற்கூரை பயங்கர சத்தத்துடன் இடிந்து விழுந்தது. இதனால் பலர் இடிபாடுகளில் சிக்கிக்கொண்டனர்.

தகவலறிந்து விரைந்து வந்த மீட்புக்குழுவினர் மீட்பு பணியில் ஈடுபட்டனர். இடிபாடுகளில் சிக்கிய பலத்த காயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதித்தனர். இடிபாடுகளில் சிக்கியிருந்த பலர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவர்களும் உயிருக்கு ஆபத்தான நிலையில் இருந்தனர். நேற்று காலை நிலவரப்படி 66 பேர் இறந்ததாக உறுதி செய்யப்பட்டிருந்தது.

மீட்பு பணிகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. நேற்று மேலும் சிலரின் உடல்கள் மீட்கப்பட்டன. மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டவர்களிலும் சிலர் இறந்தனர். இதனால் பலி எண்ணிக்கை 113 ஆக உயர்ந்துள்ளது. படுகாயம் அடைந்த 160 பேருக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது.

இறந்தவர்களில் மாண்டே கிறிஸ்டி மாகாண கவர்னர் நெல்சி குரூஸ், முன்னாள் மேஜர் லீக் பேஸ்பால் வீரருமான ஆக்டேவியோ டோட்டல் (வயது 51) ஆகியோரும் அடங்குவர். இடிபாடுகளில் இருந்து மீட்கப்பட்ட டோட்டல் மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் இறந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## திபெத்தில் நிலநடுக்கம்: ரிக்டரில் 4.4 ஆக பதிவு

பீஜிங், ஏப்.12

சீனாவின் தன்னாட்சி பெற்ற மாகாணமாக திபெத் உள்ளது. இமயமலையின் வடக்கு பகுதியில் உயரமான இடத்தில் திபெத் அமைந்துள்ளது. திபெத்தில் கடந்த ஜனவரி 7ம் தேதி பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. அந்நாட்டின் ஷிகாட்சே நகரை மையமாக கொண்டு நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கத்தால் 120க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

இந்நிலையில், திபெத்தில் இன்று காலை நிலநடுக்கம் ஏற்பட்டது. காலை 10.42 மணியளவில் (இந்திய நேரப்படி) ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 4.4 ஆக பதிவானதாக தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

10 கி.மீ. ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம், 28.29 டிகிரி வடக்கு அட்சரேகையிலும், 86.74 டிகிரி கிழக்கு தீர்க்கரேகையிலும் இருக்கும் என முதலில் தீர்மானிக்கப்பட்டது. நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதம் மற்றும் பாதிப்பு குறித்து எந்தவித தகவலும் வெளியாகவில்லை.

## இரவு பகலாக தாக்குதல்... பயங்கரவாதிகளின் சுரங்கம், கட்டிடங்களை தகர்த்த இஸ்ரேல்



டெல் அவிவ், ஏப்.12

ஹமாஸ் அமைப்புக்கு எதிராக ஓராண்டாக இஸ்ரேல் தாக்குதல் நடத்திய நிலையில், முதல்கட்ட போர்நிறுத்த ஒப்பந்த அடிப்படையில், பரஸ்பரம் கைதிகள் விடுவிக்கப்பட்டனர். எனினும், 2வது கட்ட போர்நிறுத்த ஒப்பந்தம் ஏற்படாத சூழலில், திடீரென இஸ்ரேல் தாக்குதலில் ஈடுபட தொடங்கியது.

பயங்கரவாதிகளை இலக்காக கொண்டு நாங்கள் தாக்குதல் நடத்துகிறோம் என இஸ்ரேல் கூறுவதுடன், மக்கள் அடர்த்தியான பகுதிகளில் அவர்கள் (ஹமாஸ் அமைப்பினர்) செயல்படுகின்றனர் என்றும் அதனால், பொதுமக்களின் உயிரிழப்புகள் ஏற்படுகின்றன என்றும் குற்றச்சாட்டாக கூறியது. தாக்குதலையும் தீவிரப்படுத்தி வருகிறது.

இந்நிலையில், காசா மீது நள்ளிரவு மற்றும் காலையில் என தொடர்ச்சியாக இஸ்ரேல் பாதுகாப்பு படை தீவிர தாக்குதலில் ஈடுபட்டது. இதில், கடந்த 24 மணிநேரத்தில் 35 கட்டிடங்கள் மற்றும் சுரங்கங்கள் தகர்க்கப்பட்டன என இஸ்ரேல் தெரிவித்து உள்ளது.

இதுபற்றிஇஸ்ரேல்பாதுகாப்புபடையின்செய்திதொடர்பாளர்கூறும்போது, எங்களுடையவிமானபடைகாசாமுனைபகுதியில்தொடர்ந்துநடவடிக்கையில் ஈடுபட்டுவருகிறது.பயங்கரவாதிகளின்உட்கட்டமைப்புகளைதகர்ப்பதுடன், பயங்கரவாதிகளையும் தாக்கி அழித்து வருகிறது.

ரபா மற்றும் மொராஜ் பகுதியில் படைகள் தொடர்ந்து செயல்பாட்டில் உள்ளன. அந்த பகுதிகளை எங்களுடைய கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வர தொடர்ந்து செயல்படுவோம் என்றார். அந்த பகுதியில், நேரடி அச்சுறுத்தலாக இருந்த கண்காணிப்பு நிலைகள், பயங்கரவாதிகள் மற்றும் பயங்கரவாதிகளின் உட்கட்டமைப்புகள் ஆகிய இலக்குகள் தாக்கி அழிக்கப்பட்டன என்றார்.

# ரூ.32.64 கோடி செலவில் 199 புதிய வகுப்பறை கட்டடங்கள் : முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று (12.4.2025) தலைமைச் செயலகத்தில், பள்ளிக் கல்வித் துறை சார்பில் கீழ் செயல்படும் பொது நூலக இயக்ககத்தின் சார்பில் ரூ.84 கோடியே 76 லட்சம் செலவில் அனைத்து மாவட்டங்களிலும் கட்டப்பட்டுள்ள 326 நூலகக் கட்டடங்களை திறந்து வைத்தார்.

மேலும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 100 ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி மற்றும் நடுநிலைப்பள்ளிகளில் 32 கோடியே 64 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 199 வகுப்பறைக் கட்டடங்களையும் திறந்து வைத்தார்.

தமிழ்நாடு அரசின் 202425ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், குழந்தைகள், வளர் இளம் பருவத்தினர் மற்றும் இளைஞர்களை ஈர்க்கும் வகையில் பொது நூலகங்களில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட 213 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

பொது நூலக இயக்ககத்தின் கீழ் செயல்படும் நூலகங்களுக்கு 2023 2024ஆம் ஆண்டில் மாநிலங்களுக்கு மூலதன முதலீட்டிற்கான சிறப்பு உதவித் திட்டம் பகுதி VII இன்கீழ், 821 பொது நூலகங்களுக்கு கூடுதல்கட்டடம்கட்டுதல்/தேவையான மேஜைகள், நாற்காலிகள் போன்ற தளவாடங்கள், கணினி தொடர்பு டைய சாதனங்கள் மற்றும் புத்தகங்க ள் வாங்குதல் போன்றவற்றிற்கு சிறப்பு நிதியுதவியாக 213 கோடியே 46 இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டது. இதில் ஒரு நூலகக் கட்டடம் 500 சதுர அடி பரப்பளவில் 821 பொது நூலகங்களுக்கு உள்ளாட்சி அமைப்புகள் வழியாக புதிய கட்டடம் கட்டப்பட்டு வருகிறது.

தற்பொழுது ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் 246 நூலகங்களும், பேரூராட்சிகள் இயக்ககம் மூலம் 44 நூலகங்களும், நகராட்சி நிர்வாகத் துறை (நகராட்சி) மூலம் 28 நூலகங்களும், பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் 8 நூலகங்கள், என அனைத்து மாவட்டங்களிலும் மொத்தம் 71 கோடியே 72 இலட்சம் ரூபாய் செலவிலான நூலகக் கட்டடங்கள், 6 கோடியே 52 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நூல்கள், 4 கோடியே 73 இலட்சம் ரூபாய் மதிப்பிலான மேஜைகள், நாற்காலிகள் போன்ற தளவாடங்கள், 1 கோடியே 79 இலட்சம் ரூபாய் மதிப்பிலான கணினி தொடர்புடைய சாதனங்கள், என மொத்தம் 84 கோடியே 76 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 326 நூலகக் கட்டடங்களை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றையதினம் திறந்து வைத்தார்.

கல்விக்கு முக்கியத்துவம் அளித்திடும் வகையில் முதலமைச்சரின் காலை உணவு திட்டம், எண்ணும் எழுத்தும், இல்லம் தேடி கல்வி, பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்கள் போன்ற பல்வேறு வரலாற்று முன்னெடுப்புகளை நிறைவேற்றி வருவதன் தொடர்ச்சியாக,ஊராட்சிஒன்றியதொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கு சுமார் 800 கோடி மதிப்பீட்டில் 6 ஆயிரம் புதிய வகுப்பறைகள் கட்டப்படும் என்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விதி 110 ன் கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார். இத்திட்டம் "குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்" என்று ஊரகப் பகுதிகளில் அறிமுகப்படுத்த ப்பட்டு, செயல்பட்டு வருகிறது .

இத்திட்டத்தின் கீழ் கட்டப்படும் கட்டடங்கள் அனைத்தும் குழந்தை நேய சிறப்பு அமைப்புகளான உயர்த்தப்பட்ட மேற்கூரை, விசாலமான தாழ்வாரம், காற்றோட்டமிக்க ஜன்னல் வசதிகள், வழுக்காத தரைகள், கற்றலை ஊக்குவிக்கும் சுவர் ஓவியங்கள், வாழ்க்கைப் பாடங்கள் போன்றவற்றை உள்ளடக்கியதாகும்.

குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், இதுவரை 1014 கோடி ரூபாய் செலவில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி மற்றும் நடுநிலைப்பள்ளிகளில் 3148 வகுப்பறைக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

அதன் தொடர்ச்சியாக, குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், கள்ளக்குறிச்சி மாவட்டம் திருக்கோவிலூர், காஞ்சிபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்புதூர், கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் மற்றும் தளி, மதுரை மாவட்டம் செல்லம்பட்டி மற்றும் மதுரை கிழக்கு, நாகப்பட்டினம் மாவட்டம் திருமருகல், புதுக்கோட்டை மாவட்டம் அன்னவாசல், கந்தர்வக்கோட்டை, கறம்பக்குடி, குன்றாண்டர்கோவில், விராலிமலை மற்றும் மணமேல்குடி, இராமநாதபுரம் மாவட்டம் கடலாடி, கமுதி, ஆர்.எஸ்.மங்கலம் மற்றும் திருப்புல்லாணி, இராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணம், சோளிங்கர், திமிரி மற்றும் காவேரிப்பாக்கம், சேலம் மாவட்டம் கெங்கவல்லி, பனமரத்துப்பட்டி மற்றும் வாழப்பாடி, தஞ்சாவூர் மாவட்டம் பூதலூர், மதுக்கூர், கும்பகோணம், திருவையாறு, ஒரத்தநாடு, பட்டுக்கோட்டை, திருவிடைமருதூர், தஞ்சாவூர், திருப்பனந்தாள் மற்றும் அம்மாபேட்டை, திருச்சிராப்பள்ளி மாவட்டம் மண்ணச்சநல்லூர், மணப்பாறை, புள்ளம்பாடி மற்றும் திருவெறும்பூர், திருப்பத்தூர் மாவட்டம் மாதனூர், ஜோலார்பேட்டை, கந்திலி மற்றும் நாட்ராம்பள்ளி, தருமபுரி மாவட்டம் நல்லம்பள்ளி மற்றும் அரூர், திருவாரூர் மாவட்டம் முத்துபேட்டை மற்றும் திருவாரூர் ஆகிய இடங்களில் 100 ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி மற்றும் நடுநிலைப்பள்ளிகளில்32கோடியே 64 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 199 வகுப்பறைக் கட்டடங்களைதமிழ்நாடுமுதலமைச்சர் அவர்கள் இன்றையதினம் திறந்து வைத்தார்.

## சேது பாஸ்கரா வேளாண்மை கல்லூரி மாணவர்கள் விவசாயிகளிடம் கலந்துரையாடல்




சிவகங்கை மாவட்டம் கல்லல் அருகே சுமார் 234 ஏக்கரில் பரந்து விரிந்து செயல்பட்டு வரும் சேது பாஸ்கரா வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் செயல்பட்டு வருகிறது. இந்த நிறுவனத்தில் பயின்றுவரும் வேளாண்மைத்துறை மாணவர்கள் தங்களது படிப்பின் இறுதியாண்டில் செய்முறைப்படிப்பாக அருகில் உள்ள கிராமங்களுக்குச் சென்று அங்குள்ள விவசாயிகளை சந்தித்து நவீன விவசாய முறைகள் உள்ளிட்ட பல்வேறு விசயங்களைப் பற்றி கலந்துரையாடுவது வழக்கம். அந்த வகையில் சேது பாஸ்கரா கல்லூரியில் நான்காம் ஆண்டு பயிலும் மாணவர்களான அதியமான், தினேஷ், செல்வா, ராம் அரவிந்த், கல்யாண கிர்த்திக் ,முனிராஜ், தங்களது கிராமப்புற பயிற்சி அனுபவ திட்டத்தில் இடைகாட்டூர் கிராமத்தில் அங்குள்ள விவசாய பெருங்குடி மக்களுக்கு நவீன விவசாய முறைகளைப்பற்றி அறிவுரைகளை வழங்கினர்

## காங்கிரஸ் தலைவர் குமரி அனந்தன் மறைவு: சட்டமன்ற மேனாள் உறுப்பினர் நினைவலைகள்



சிவகங்கை மாவட்டம் இளையான்குடி வடக்கு ஒன்றியக்கழக திமுக செயலாளரும் , சட்டமன்ற மேனாள் உறுப்பினருமான சுப. மதியரசன் அவர்கள் சொல்லின் செல்வர் குமரி அனந்தன் அவர்களது இயற்கை எய்தியதைத்தொடர்ந்து தனது இதய அஞ்சலியை தெரிவித்ததுடன் குமரி அனந்தன் அவர்கள் பூரண மதுவிலக்கை அமுல்படுத்தக்கோரி தமிழகம் முழுவதும் நடைபயணம் மேற்கொண்டதையும் 28.1.2016 அன்று இளையான்குடி வரும் வழியில் ஒன்றிய மற்றும் பேரூர்க் கழக திமுக சார்பில் வரவேற்பளித்து பின்னர் தனது இல்லத்தில் இரவு தங்கி உணவருந்தி ஓய்வெடுத்துச்சென்றதையும் நினைவுகூர்ந்தார்.

அப்போது வாழ்த்துச் செய்தி ஒன்றை தமது கைப்பட எழுதி தமக்கும் ஒன்றிய பேரூர் நிர்வாகிகளான பேரூர்க்கழக செயலாளர் நஜ்முதீன், மாவட்டப்பிரதிநிதிகள் யாஸின், கருணாகரன், மாவட்ட விவசாய அணி காளிமுத்து, தொண்டரணி புலிக்குட்டி, துணைச்செயலாளர் மலைமேகு, அஜீஸ், சாத்தம்மாள் சண்முகம், மாணவரணி பாலகிருஷ்ணன் , ஊராட்சி தலைவர்கள்மலைச்சாமி, முருகேசன், சேகர், செயலாளர்கள் பழனிவேல், சோமநாதன், மதியழகன், சிவக்குமார், இளவரசன், இராஜேந்திரன் உள்ளிட்ட நிர்வாகிகள் அனைவருக்கும் வாழ்த்துச் செய்தியை குறிப்பேடில் எழுதிக்கொடுத்ததையும் நினைவுகூர்ந்தார்...



சட்டமன்ற மானிய கோரிக்கைகளை வெற்றாகரமாக முடித்துவிட்டு திரும்பிய தமிழ்நாடு கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் காளையார்கோவில் தெற்கு ஒன்றியக்கழக துணைச்செயலாளர் கோலாந்தி கோதண்டபாணி அவர்கள் பொன்னாடை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார்



13.04.2025 அன்று பிறந்த நாள் காணும்
தினராஜ்ஜியம் மற்றும்
வெற்றிப்பாதை நாளிதழின்
ஆசிரியர் & வெளியிட்டார் சேவ ரத்னா டாக்டர்
மு.வரதராஜ் பெருமாள் இணை ஆசிரியர்
வ.மகாதேவி அவர்களின் செல்வமகள்
V.M.ஜீவதாரணிக்கு
இனிய பிறந்த நாள் நல்வாழ்த்துக்கள்

## குடமுழுக்கு விழாவில் அமைச்சர் சாமி தரிசனம்

தமிழ்நாடு அரசு இந்துசமய அறநிலையத் துறையின் கோவிலான அருள்மிகு பூமாயி அம்மன் திருக்கோவில் நன்னீராட்டு விழா காலையில் சிறப்பாக நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் தமிழ்நாடு கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரிய கருப்பன் மற்றும் அவரது மனைவி பிரேமா பெரியகருப்பன் , திமுக தலைமைப்பொதுக்குழு உறுப்பினர் அறங்காவலர் ஏஆர். ஜெயமூர்த்தி, திருப்புத்தூர் பேரூராட்சி தலைவர் கோகிலாராணி கே. எஸ். நாராயணன், அறநிலையத்துறை சிவகங்கை மண்டல இணை ஆணையர் பாரதி உள்ளிட்ட, அறநிலையத்துறை அலுவலர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் குடமுழுக்கு விழாவில் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்..







## வக்பு திருத்த சட்டத்தை கொண்டு வந்த மத்திய அரசை கண்டித்து தமிழக மஸ்ஜிதுகளின் ஐக்கிய ஜமாஅத் கூட்டமைப்பு சார்பில் தாராபுரம் அண்ணா சிலை முன்பு கருப்பு பேட்ஜ் அணிந்து இஸ்லாமியர்கள் மாபெரும் ஆர்ப்பாட்டம்

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் வக்பு திருத்த சட்டத்தை கொண்டு வந்த மத்திய அரசை கண்டித்து தாராபுரம் தமிழக மஸ்ஜிதுகளின் ஐக்கிய ஜமாஅத் கூட்டமைப்பு சார்பில் ஆர்ப்பாட்டம் அறிவிக்கப்பட்டது அதன்படி தாராபுரத்தில் உள்ள அனைத்து பள்ளி வாசல்கள் சேர்ந்த ஜமாத்தார்கள் வெள்ளிக்கிழமை தொழுகை முடிந்து வெளியே வந்த இஸ்லாமியர்கள் கருப்பு பேட்ஜ் அணிந்து ஊர்வலம் சென்று வக்பு சொத்துக்




களை மத்திய அரசு கொள்ளையடிக்க முயல்வதாகவும் மத்திய அரசின் வெறுப்பு அரசியலையும் கண்டித்தும் கண்டன கோஷங்கள் எழுப்பியும் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர் மற்றும் இந்த ஆர்ப்பாட்டத்தில் தாராபுரம் திமுக நகரக் கழகச் செயலாளர் முருகானந்தம் நகர மன்ற தலைவர் பாப்பு கண்ணன் இமாம்கள் ஏராளமான ஜமாத்தார்கள் பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்



காரைக்குடியை கல்வி நகரமாக உருவாக்கிய வள்ளல் அழகப்பர் அவர்களின் பேரன் மரியாதைக்குரிய வள்ளல் ஐயா ராமநாதன் வைரவன் அவர்களின் 77வது பிறந்த நாளை முன்னிட்டு மாண்புமிகு மேயர் அண்ணன் சே. முத்துத்துரை அவர்கள் சால்வை அணிவித்து மரியாதை செய்த வாழ்த்துக்களை தெரிவித்த பொழுது உடன் மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் சோனா கண்ணன் அவர்கள் அண்ணன் விவாலிட்டி சுப்பு அவர்கள்

## தென்காசி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் S. அரவிந்த் தலைமையில் மாவட்ட காவல் அலுவலகத்தில் பணிபுரியும் அனைத்து காவல்துறையினர் மற்றும் அமைச்சுப் பணியாளர்கள் இணைந்து சமத்துவ நாள் உறுதிமொழி

தென்காசி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் S. அரவிந்த் தலைமையில் மாவட்ட காவல் அலுவலகத்தில் பணிபுரியும் அனைத்து காவல்துறையினர் மற்றும் அமைச்சுப் பணியாளர்கள் இணைந்து சமத்துவ நாள் உறுதிமொழி எடுத்துக்கொண்டனர். இதேபோல் மாவட்டத்தில் உள்ள அனைத்து காவல் நிலையங்களிலும் காவல்துறையினர் சமத்துவ நாள் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். இதில் சாதி வேறுபாடுகளுக்கு எதிராகவும், சாதிகளின் பெயரால் நடக்கும் சமூக




அடக்குமுறைக்கு எதிராகவும் தொடர்ந்து போராடி, ஒதுக்கப்பட்டவர்களுடைய உரிமைகளுக்காகவும் ஒடுக்கப்பட்டவர்களுடைய சமத்துவத்திற்காகவும் வாழ்நாளெல்லாம் குரல் கொடுத்து, எளிய மக்களின் உரிமைகளை பற்றி விழிப்புணர்வை ஊட்டிய நம் அரசியலமைப்புச் சட்டத்தை வகுத்து தந்த அண்ணல் அம்பேத்கர் அவர்களுடைய பிறந்தநாளில் சாதி வேறுபாடுகள் எதுவும் இல்லாத சமத்துவ சமுதாயத்தை அமைக்க நம் அனைவரும் பாடுபடுவோம் என்றும், சக மனிதர்களை சாதியின் பெயரால் ஒருபோதும் அடையாளம் காண மாட்டேன் என்றும் சக மனிதர்களிடம் சமத்துவத்தை வாழ்நாள் முழுவதும் கடைபிடிப்பேன் என்றும் உளமாற உறுதி ஏற்கிறேன், என்று உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்..



சிவகங்கைமாவட்டம்மாநகராட்சியின்புதிய ஆணையாளராகபொறுப்பேற்றினார்காரைக்குடி மாநகராட்சியின்பொறுப்பு ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ள மரியாதைக்குரிய ஆணையாளர் உயர்திரு நாராயணன் அவர்கள் மாண்புமிகு மேயர் சே. முத்துத் துரை அவர்களை சந்தித்து பூங்கொத்து மற்றும் சால்வை அணிந்து மகிழ்ச்சியை தெரிவித்தார்

## கட்சிப் பதவியை பறித்த ஸ்டாலின்.. வாடிய முகத்துடன் வந்த பொன்முடி.. வீட்டின்முன் குவிந்த ஆதரவாளர்கள்!

விழுப்புரம்

திமுக துணைப் பொதுச் செயலாளர் பொறுப்பில் இருந்து அமைச்சர் பொன்முடி நீக்கப்பட்டிருப்பதாக முதலமைச்சரும், திமுக தலைவருமான மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார். இதனைத் தொடர்ந்து வாடிய முகத்துடன் வீட்டில் இருந்து வெளி வந்த பொன்முடி, உடனடியாகசென்னைக்கு புறப்பட்டுள்ளார். அப்போது வீட்டின் முன் குவிந்த ஆதரவாளர்கள் அவருக்கு ஆறுதல் கூறினர்.

மகளிர் மற்றும் இந்து மதம் தொடர்பாகவும் அமைச்சர் பொன்முடி சர்ச்சையான கருத்துகளை தெரிவித்திருந்தார். இந்த கருத்துக்கு பாஜக உட்பட பல்வேறு தரப்பினரும் கண்டனம் தெரிவித்து வந்தனர். அதேபோல் திமுக



எம்பி கனிமொழியும் பொன்முடிக்கு கண்டனம் தெரிவித்தார். இந்த நிலையில் திமுகவின் துணைப் பொதுச்செயலாளர் பதவியில் இருந்து பொன்முடி நீக்கப்படுவதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார்.

அவருக்கு பதிலாக எம்பி திருச்சி சிவா துணை பொதுச்செயலாளராக நியமனம் செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டது. இது தொடர்பாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்ட அறிக்கையில், கழக துணைப் பொதுச்செயலாளர் பொன்முடி வகித்து வரும் துணைப் பொதுச் செயலாளர் பொறுப்பில் இருந்து விடுவிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

இது திமுகவினர் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இந்த தகவல் வெளியான அடுத்த சில நிமிடங்களிலேயே அமைச்சர் பொன்முடியின் ஆதரவாளர்கள் அவரின் வீட்டிற்கு முன் குவிந்தனர். அதுமட்டுமல்லாமல் ஸ்டாலின் வெளியிட்ட அறிக்கையில் பொன்முடியை அமைச்சர் என்று குறிப்பிடாததால், அவர் விரைவில் அமைச்சர் பதவியில் இருந்து நீக்கப்பட வாய்ப்பு உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்த நிலையில் பதவி பறிக்கப்பட்ட பின் திமுக நிர்வாகிகளுடன் தனது வீட்டில் அமைச்சர் பொன்முடி ஆலோசனையில் ஈடுபட்டார். அதனைத் தொடர்ந்து சென்னை புறப்படுவதற்காக வெளி வந்த பொன்முடி முகம் வாடிய முகத்துடன் காணப்பட்டார். இதன்பின் காரில் ஏறி சென்னைக்கு புறப்பட்ட போது, அவரது ஆதரவாளர்கள் அவருக்கு ஆறுதல் கூறினர்.

ஏற்கனவே அண்ணா அறிவாலயத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், பொதுச்செயலாளர் துரைமுருகன் மற்றும் பொருளாளர் டிஆர் பாலு ஆகியோர் ஆலோசனையில் ஈடுபட்டுள்ளனர். இந்த ஆலோசனைக்கு பின் பொன்முடி மீதான அடுத்தக்கட்ட நடவடிக்கை குறித்து முடிவு எடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம் ஓசூர் மாநகர மேற்குப் பகுதி திமுக சார்பில் தண்ணீர் பந்தல் திறப்பு விழா நிகழ்ச்சி

ஓசூரி, ஏப்,12

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம் ஓசூர் மாநகர மேற்குப் பகுதி திமுக சார்பில் தண்ணீர் பந்தல் திறப்பு விழா நிகழ்ச்சி கழக பிரமுகர் .பாலாஜி மற்றும் . அருண் ஏற்பாட்டில் கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயலாளர் ஓசூர் சட்டமன்ற உறுப்பினர் திரு ஒய் பிரகாஷ் அவர்களும் ஓசூர் மாநகர செயலாளர் மாநகராட்சி மேயர் திரு எஸ் ஏ சத்யா . அவர்களும் ரிப்பன் வெட்டி துவக்கி வைத்தனர்.

இந்நிகழ்ச்சியில் ஓசூர் மாநகர மேற்குப் பகுதி செயலாளர் மாநகராட்சி துணை மேயர் ஆனந்தய்யா அவர்கள் முன்னிலை வகித்தார்.

இந்நிகழ்ச்சியில் 12 வகையான பழங்களும் இளநீர், நீர்மோர் மற்றும் பலரசங்களும் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட பொருளாளர் சுகுமாரன், பொதுக்குழு உறுப்பினர் தனலட்சுமி, மாநகர துணை செயலாளர்கள் கோபாலகிருஷ்ணன், ரவிக்குமார், சாந்தி, சுகாதார குழு தலைவர் என் எஸ் மாதேஸ்வரன், ஓசூர் ஒன்றிய செயலாளர் கஜேந்திரமூர்த்தி,மாவட்ட பிரதிநிதி அழகரசன், மேற்கு பகுதி அவை தலைவர் டி வி கருணாநிதி, பகுதி




துணைச் செயலாளர் சுரேஷ், பொருளாளர் நந்தகோபால், கிளைச் செயலாளர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் சீனிவாசலு, சென்னீரன், சந்தோஷ், முனிராஜ், முனிகிருஷ்ணன், ஹரிஷ், ரகு, கார்த்தி, அணிகளின் அமைப்பாளர்கள் ஞானசேகரன், மாணிக்கவாசகம், கலைச்செழியன், சங்கர்,ரூபி,சீனிவாசன், கலைவாணன், காலேசா, சீனிவாசன், ஸ்ரீதர், சேட்டு, விநோத், ரமேஷ், சுப்பிரமணி, ராஜேந்திரா, சந்திரலேகா, ஜீவா, சூர்யா, வான் மொழி, சரஸ்வதி, மல்லேஷ், கிரி, பாலாஜி, பொன் அண்ணாமலை, கே.வி நாகேஷ், ஆனந்தன், விஜயகாந்த், மணி மற்றும் மூத்த முன்னோடிகள், மாவட்ட மாநகர பகுதி வார்டு கழக நிர்வாகிகள், பொதுமக்கள் மற்றும் பத்திரிகை நண்பர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## புரட்சி பாரதம் கட்சியின் நிறுவனர் மறைந்த மூர்த்தியாரின் 73வது பிறந்த நாள் விழா: மக்களுக்கு இனிப்பு வழங்கி கொண்டாட்டம

மதுரையில் புரட்சி பாரதம் கட்சியின் சார்பில் புரட்சி பாரதம் கட்சியின் நிறுவனர் மறைந்த மூர்த்தியாரின் 73வது பிறந்த நாளை முன்னிட்டு ஆட்சியர் அலுவலகம் எதிரே உள்ள அண்ணா பஸ் நிலை யத்தில் மதுரை மாநகர் மாவ ட்ட செயலாளர் பா.உத யகுமார் தலைமையில் மாநில துணைச்செயலாளர் முருகேசன் முன்னிலையில் பஸ் பயணிகளுக்கு இனிப்பு வழங்கி கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மூர்த்தி யார் பேரவை மாவட்ட தலைவர் மின்னல் வரதன், மேலூர் சட்டமன்ற மாவட்ட செயலாளர் தாட்கோ அழகர், கிழக்கு சட்ட மன்ற மாவட்ட செயலாளர் பரமசிவம், திருப்பரங்குன்றம் சட்டமன்ற மாவட்ட செயலாளர் மாணிக்கம், மதுரை கிழக்கு ஒன்றிய செயலாளர் சுரேஸ், மேலூர் ஒன்றிய செய்தி தொடர்பாளர் ஞானசேகரன், மதுரை



மாநகர்மாவட்ட பொருளாளர் பிரேம்குமார், மதுரை கிழக்கு ஒன்றிய துணைச்செயலாளர் சேசுராஜ், பகுதிச் செயலாளர் பாலமுருகன் ஆகியோர் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

## தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர் தலைமையில் சமத்துவ நாள் உறுதிமொழி

தஞ்சாவூர், ஏப்.12

தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர் அலுவலகக் கூட்டரங்கில் அண்ணல் அம்பேத்கர் பிறந்த தினமான 14.04.2025ஐ முன்னிட்டு "சமத்துவ நாள்" உறுதிமொழியினை மாவட்ட கலெக்டர் பா.பிரியங்கா பங்கஜம், தலைமையில் அலுவலர்கள் அனைவரும் ஏற்றனர். உறுதிமொழி விவரம் பின்வருமாறு.

சமத்துவ நாள் உறுதிமொழி சாதி வேறுபாடுகளுக்கு எதிராகவும், சாதிகளின் பெயரால் நடக்கும் சமூக அடக்கு



முறைகளுக்கு எதிராகவும், தொடர்ந்து போராடி, ஒதுக்கப்பட்டவர்களுடைய உரிமைகளுக்காகவும், ஒடுக்கப்பட்டவர்களுடைய சமத்துவத்திற்காகவும், வாழ்நாள் எல்லாம் குரல் கொடுத்து, எளிய மக்களின் உரிமைகளைப் பின்பற்றி விழிப்புணர்வை ஊட்டிய. நம் அரசியலமைப்புச் சட்டத்தை வகுத்து தந்த அண்ணல் அம்பேத்கர் அவர்களுடைய பிறந்தநாளில், சாதி வேறுபாடுகள் ஏதுமில்லாத சமத்துவ சமுதாயத்தை அமைக்க நாம் அனைவரும் பாடுபடுவோம் என்றும் சக மனிதர்களை சாதியின் பெயரால் ஒருபோதும் அடையாளம் காணமாட்டேன் என்றும் சக மனிதர்களிடம் சமத்துவத்தை வாழ்நாள் முழுவதும் கடைப்பிடிப்பேன் என்றும் உளமார உறுதி ஏற்கிறேன். என்ற உறுதிமொழியினை மாவட்ட கலெக்டர் .பா. பிரியங்கா பங்கஜம்,இ.ஆ.ப அவர்கள் தலைமையில் அனைத்துத் துறை அரசு அலுவலர்களும் ஏற்றுக்கொண்டனர்.

## சித்தி விநாயகர் கோவில் மகா கும்பாபிஷேகம்

மதுரை ஒத்தக்கடை அருகே சித்தி விநாயகர் கோவிலில் மகா கும்பாபிஷேக விழா வெகுவிமர்சையாக நேற்று நடைபெற்றது. கும்பாபிஷேகத்தை முன்னிட்டு யாகசாலை பூஜைகள் நடைபெற்றது. தொடர்ந்து விக்னேஸ்வர பூஜை,கணபதிஹோமம், வாஸ்து சாந்தி, கணபதி மூலமந்திர ஜபஹோமம் உள்ளிட்டவை நடைபெற்றது. மேலும் மேளத்தாளங்களுடன் பல்வேறு நதிகளில் இருந்து கொண்டு வரப்பட்ட புனித நீர் அடங்கிய கலச குண்டங்கள் யாகசாலையில் இருந்து கோபுர



விமானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. அங்கு கோபுர கலசங்கள் மீது சிவாச்சாரி யார்கள் புனித நீரை ஊற்றி மகா கும்பாபிஷேகம் நடத்தினர். இதனைத் தொடர்ந்து மகாதீபாராதனைகள் காட்டப்பட்டும், பக்தர்களின் மீது புனித நீர் தெளிக்கப்பட்டும், கும்பாபிஷே கமானது நடைபெற்றது.

இந்த மஹா கும்பாபிசேக விழாவில் பல்வேறு பகுதிகளில் இருந்து திரளான பக்தர்கள் கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். விழா ஏற்பாடுகளை கமிட்டி நிர்வாகிகள், ஊர் பொதுமக்கள் பெண்கள் உள்ளிட்டோர் செய்து இருந்தனர்.

## இஞ்சிமேடு சிவன் கோயிலில் பிரதோஷவிழா, சுவாமி திருமண உற்சவம்

பெரணமல்லூர்அருகே சிவன் கோயிலில் நடைபெற்ற பிரதோஷ விழா மற்றும் சுவாமி திருக்கல்யாணத்தில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமியை வழிபட்டனர். பெரணமல்லூர் அடுத்த இஞ்சிமேடு கிராமத்தில் மிகவும் பிரசித்தி திருமணி சேறையுடையார் சிவன் கோயில் அமைந்துள்ளது. இந்த கோயிலில் மாதம்தோறும் பவுர்ணமி கிரிவலம் மற்றும் பிரதோஷ விழாக்கள் சிறப்பாக நடைபெற்று



வருகிறது. இந்நிலையில் நேற்று முன்தினம் பங்குனி மாதம் வளர்பிறை பிரதோஷம் முன்னிட்டு மாலை 5மணிக்குமேல் மூலவருக்குமுன்அமைந்திருக்கும் நந்தி பகவானுக்கு பால், தயிர், தேன், இளநீர், மஞ்சள், குங்குமம், சந்தனம் கொண்டு சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றது. இதன் பின்னர் சிறப்பாக அலங்கரிக்கப்பட்ட நந்தி பகவான் பக்தர்களுக்கு அருள்பாலித்தார். அதைத் தொடர்ந்து பங்குனிஉத்திரம்முன்னிட்டு கோயில் வளாகத்தில் யாகம் வளர்க்கப்பட்டு திருமணி சேறையுடையார், திருமணி நாயகிக்கு திருமண உற்சவம் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி அருள் பெற்றனர். மேலும் நன்கு அலங்கரிக்கப்பட்ட உற்சவர் கோயில் வளாகத்தில் உலா வந்தார். இந்த நிகழ்ச்சியில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி அருள் பெற்றனர்.

## ஆற்காடு அருகே உள்ள திமிரி மோகனாவரம் கிராமத்தில் தாரன அஷ்ட பந்தன மகா கும்பாபிஷேக விழா



ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு அருகே உள்ள திமிரி மோகனாவரம் கிராமத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ சப்த கன்னி அம்மன் ஆலயம் மற்றும் ஸ்ரீ முனீஸ்வரர் ஆலய ஜீரனோத் தாரன அஷ்ட பந்தன மகா கும்பாபிஷேக விழாவில் ஏராளமான பக்தர்கள் பங்கேற்பு

முன்னதாக யாகசாலை அமைக்கப்பட்டு 108ஹோம திரவியங்கள் கொண்டு வேள்வி பூஜை செய்யப்பட்ட புனித நீர் கலசத்தின் மீது ஊற்றி கும்பாபிஷேகம் நடைபெற்றது. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர் அவர்கள் மீது கலச நீரானது தெளிக்கப் பட்டது.

இதனைத் தொடர்ந்து அருகில் உள்ள விநாயகர் கோவிலில் இருந்து 108 பால்குடம் ஊர்வலமாக எடுத்து வந்து சப்த கன்னிகளுக்கு அபிஷேகம் செய்யப்பட்டது.

## கைலாசநாதர் அருள்மிகு காமாட்சி அம்மனுக்கு திருக்கல்யாண வைபோக உற்சாகம்; அன்னதானம்



ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு செட்டித் தெரு பாலாற்றங்கரை ஓரத்தில் உள்ள அருள்தரும் கைலாசநாதர் அருள்மிகு காமாட்சி அம்மனுக்கு திருக்கல்யாண வைபோக உற்சாகமும் வெகு விமர்சியாக அறங்காவலர் குழு தலைவர் பூவரசி ஜெகன் தலைமையில் நடைபெற்றது.

முன்னதாக ஆற்காடு பாலாற்றங்கரை ஓரத்தில் உள்ள வரசித்தி விநாயகர் ஆலயத்தில் இருந்து 101 தட்டு சீர்வரிசையுடன் சிவ மற்றும் பூதக வாத்தியத்துடன் ஊர்வலமாக அருள்தரும் கைலாசநாதர் அருள்மிகு காமாட்சி அம்பாளுக்கு கொண்டுவரப்பட்டது.

பின்னர் இதனை தொடர்ந்து அருள்தரும் கைலாசநாதர் அருள்மிகு காமாட்சி அம்மனுக்கு மங்களவாத்தியம் வாசிக்க மேல தாளங்கள் முழங்க திருக்கல்யாண வைபோகம் வெகு விமர்சியாகவும் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்ட பக்தர்கள் அரோகரா அரோகரா என்று கோஷம் முழங்க அரும்பெரும் கைலாசநாதர் அருள்மிகு காமாட்சியம்மனை வழிபட்டனர்.

திருக்கல்யாண வைபவத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது

## கள்ளிக்குடி அருகே வில்லூர் சங்கிலி கருப்பசாமி பராசக்தி காளியம்மன்அம்மன் பங்குனி திருவிழா



மதுரை திருமங்கலம் அருகே வில்லூர் கிராமத்தில் அருள்மிகு ஸ்ரீ சங்கிலி கருப்பசாமி அன்னை ஸ்ரீ பராசக்தி காளியம்மன் திருக்கோவில் அமைந்துள்ளது. ஒவ்வொரு ஆண்டும் பங்குனி திருவிழா வெகு விமர்சையாக நடைபெறும். இந்த ஆண்டிற்கான பங்குனி திருவிழாவையொட்டி காப்புக்கட்டுதல் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இந்த கிராமத்தைச் சேர்ந்த சிறுவர் சிறுமியர் பெண்கள் உட்பட நேர்த்திக்கடன் நேர்ந்தவர்கள் காப்பு கட்டினர். அதனைத் தொடர்ந்து பால்குடம் எடுப்பவர்கள் ஒரு வாரம் விரதம் இருந்து பால்குடம் எடுக்கும் நிகழ்வு நடைபெறுவது வழக்கம்.. இத் திருக்கோயிலுக்கு மதுரை விருதுநகர் மற்றும் வில்லூர் சுற்றுவட்டாரத்திலுள்ள 20க்கும் மேற்பட்ட கிராமங்களில் இருந்து 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டனர். இதில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் அழகு செட்டியார் ஊரணியிள் இருந்து அருள்மிகு அன்னை பராசக்தி அம்மன் கோவில் வரை பக்தர்கள் பால்குடம் எடுத்து சென்று அம்மனுக்கு செலுத்தி அபிஷேக ஆராதனை நடைபெற்றது. மேலும் நூற்றுக்கு மேற்பட்ட பக்தர்கள் அலகு குத்தியும் பறவைக் காவடி எடுத்து அம்பாளுக்கு நேர்த்திக்கடன் செலுத்தினர். நேற்று இரவு சங்கிலி கருப்பசுவாமி பாப்பா ஊரணியிலிருந்து கரகம் சந்தன குடம் எடுத்து ஊர்வலமாகவந்துசங்கிலிக்கருப்பு சுவாமிக்கு அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றது. இத இரவு தீச்சட்டி எடுத்து பக்தர்கள் நேர்த்தி கடன் செலுத்தினர் மேலும் முளைப்பாரி எடுக்கும் நிகழ்வு நடைபெற்றது. இரவு அதேபோல பாப்பா ஊரணியிலிருந்து அம்மன் உருவம் செய்து சப்பரம் ஊர்வலமாக வந்து கோவிலை சென்றடைந்தது. இதில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். பக்தர்களுக்கு கேட்டவரத்தை வழங்கக் கூடிய அம்மனாகவும், இந்த ஊர் திருவிழா முடிந்து ஒரு வாரத்திற்குள் மழை பெய்யும் என்பது அப்பகுதியில் உள்ள மக்களின் நம்பிக்கை.

## திருமங்கலம் அருகே மாயக்குருவி சாமாயி அம்மன் ஜீர்னோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக விழா



மதுரை மாவட்டம் திருமங்கலம் அருகே உள்ள கண்டுகுளம் கிராமத்தில் வீற்றிருக்கும் அருள்மிகு ஸ்ரீ மாயக்குருவி சாமாயி அம்மன், கருப்பசாமி சோனைச் சாமி உள்ளிட்ட ஒன்பது கோவில் கும்பாபிஷேகம் நடத்த முடிவு செய்யப்பட்டது. கடந்த இரண்டு மாதங்களாக கும்பாபிஷேக பணிகள் நடைபெற்று வந்தன. பல ஆண்டுகளுக்குப் பிறகு கும்பாபிஷேகம் நடைபெறுவதால் பணிகள் துரிதமாக நடைபெற்று வந்தது. கும்பாபிஷேக விழாவையொட்டி காப்பு கட்டுதல் நிகழ்ச்சி நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து நேற்று முதல் கால யாக சாலை பூஜை கணபதி ஹோமத்துடன் தொடங்கியது. தொடர்ந்து இன்று காலை யாகசாலையில் வைக்கப்பட்ட புனித நீர் கலசங்களுக்கு சிறப்பு பூஜைகள்நடத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து சிவாச்சாரியார்கள் கலசங்களை தலையில் சுமந்து கோவிலை சுற்றி வந்து கோவில் கோபுரத்திற்கு காலை 10மணி அளவில் வேத மந்திரங்கள், மேளதாளங்கள் முழங்க கோபுர கலசத்தில் புனித நீர் ஊற்றப்பட்டு கும்பாபிஷேக விழா விமர்சையாக நடைபெற்றது. தொடர்ந்து கோவிலுக்குள் உள்ள ஒன்பது கோவில் சிலைகளுக்கும் பரிவார தெய்வங்களுக்கும் வாசனை திரவியங்கள் கொண்டு சிறப்பு அபிஷேகம், அலங்காரம், ஆராதனை நடைபெற்றது. பல ஆண்டுகளுக்கு பின்பு நடைபெறும் கும்பாபிஷேக விழாவை காண கண்டுகுளம் சாத்தங்குடி உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் இருந்து ஏராளமான பக்தர்கள் பங்கேற்று சாமி தரிசனம் செய்தனர். கோவிலுக்கு வந்த பக்தர்கள் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

## ஆண்டாபுரம் கிராமத்தில் மின்சாரம் தாக்கி உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல்



நாமக்கல், ஏப்.12

நாமக்கல் மாவட்டம், மோகனூர் வட்டம், ஆண்டாபுரம் கிராமம், தெற்குத் தெருவில் வசித்துவரும் இளஞ்சியம் (50) என்பவர் தனது மகன்வழிப் பேரன் சுஜித் (5) மற்றும் மகன்வழிப் பேத்தி ஜவிழி (3) ஆகிய மூவரும் நேற்று 7.4.2025 பிற்பகல் 3.00 மணியளவில் தங்களது தோட்டத்திற்கு சென்றபோது, 6.4.2025 அன்று இரவு வீசிய பலத்த மழை மற்றும் காற்றினால் மின் கம்பிகள் சேதமடைந்து விவசாய நிலத்தில் இருந்த இரும்புக் கம்பிவேலி மீது விழுந்த நிலையில், அந்தக் கம்பிவேலியை மேற்படி மூவரும் தொட்டபோது எதிர்பாராதவிதமாக மின்சாரம் தாக்கியதில் மூவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். இச்சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினர் மற்றும் அவர்களது உறவினர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்து, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.2.00 இலட்சம் வழங்கிட உத்தரவிட்டார்கள்.

அதன்படி, நாமக்கல் மாவட்டம், மோகனூர் வட்டம், ஆண்டாபுரம் கிராமத்தில் மின்சாரம் தாக்கி உயிரிழந்தவர்களின் இல்லத்திற்கு பாராளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர்/நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர் திரு.கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் அவர்கள் இன்று (11.4.2025) நேரில் சென்று, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தப்படி, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.2.00 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.6.00 இலட்சத்திற்கான காசோலைகளை மாவட்ட கலெக்டர் ச.உமா, தலைமையில், நாமக்கல் பாராளுமன்ற உறுப்பினர் வி.எஸ்.மாதேஸ்வரன், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.ராமலிங்கம் ஆகியோர் முன்னிலையில் குடும்பத்தினருக்கு வழங்கி, ஆறுதல் கூறினார்.

## ஆரணி டாக்டர் எம்ஜிஆர் கலைக் கல்லூரியில் வேலைவாய்ப்பு முகாம்



ஆரணி டாக்டர் எம்ஜிஆர் சொக்கலிங்கம் கலைக்கல்லூரியில் வேலைவாய்ப்பு முகாம் நடைபெற்றதில் 91 மாணவ, மாணவியர்கள் தேர்வு செய்யப்பட்டு புதன்கிழமை மாலை பணி நியமன ஆணைகள் வழங்கப் பட்டது.

ஆரணி டாக்டர் எம்ஜிஆர் சொக்கலிங்கம் கலைக்கல்லூரியில் நடைபெற்ற வேலைவாய்ப்பு முகாமில் டர்போ எனர்ஜி பிரைவேட் லிமிடெட்(டிவிஎஸ் குழுமம்) நிறுவனம் கலந்து கொண்டு மாணவர்களுக்கு பல்வேறு தேர்வு நடத்தி வேலைக்கு தேர்வு செய்தனர். இந்த வேலை வாய்ப்பு நேர்காணலில் 150க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் பங்கேற்றனர். இதில் 91 மாணவ மாணவியர்கள் தேர்வு செய்யப்பட்டு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டன. நிகழ்வில் கல்லூரி செயலாளர் ஏ.சி.ரவி தலைமை தாங்கினார். ஏ.சி.எஸ்.கல்வி குழுமத்தின் தலைவர் ஏ.சி.எஸ்.அருண்குமார் கலந்துகொண்டு தேர்வு செய்யப்பட்ட 91 மாணவ, மாணவியர்களுக்கும் பணி நியமன ஆணையை வழங்கினார்.

மேலும் இதில் கல்லூரி இணைப்பதிவாளர் பெருவழுதி, சிறப்பு அலுவலர்கள் பி.ஸ்டாலின், கார்த்திகேயன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கல்லூரி முதல்வர் வி.கந்தசாமி அனைவரையும் வரவேற்றார். நிறுவன மனித வள மேலாளர்கள் எஸ்.ராகவன், எஸ்.ஜெய்சங்கர், வேலை வாய்ப்பு அலுவலர் ரா.செந்தில்குமார், துணை முதல்வர் எஸ்.நந்தகுமார், துணைத்தலைவர்கள், வேலைவாய்ப்பு துறை ஒருங்கிணைப்பாளர்களயுவராஜா, பிரகாஷ், சத்யா, ஏழுமலை உள்ளிட்டோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இதற்கு முன்னர் நடைபெற்ற வளாக நேர்காணல் தேர்வில் டாட்டா எலக்ட்ரானிக்ஸ், மதர்சன், லேயம் ஆகிய நிறுவனங்கள் கலந்து கொண்டு 85 மாணவர்களை தேர்வு செய்து பணி நியமன ஆணைகள் வழங்கியுள்ளனர்.

## பழனியில் பங்குனி உத்திரத்தை முன்னிட்டு தமிழக வெற்றி கழகத்தின் சார்பாக ஒரு நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் நிகழ்வு



பழனி, ஏப்.12

திண்டுக்கல் மாவட்டம் பழனி தண்டாயுதபாணி திருக்கோயில் பங்குனி உத்திரத்தை முன்னிட்டு பாளையம் அருகே மாவட்டச் செயலாளர் கார்த்திக் ராஜா ஆணைக்கிணங்க மற்றும் கழக இணைச் செயலாளர் விஜய் சிவா மாவட்ட செயற்குழு உறுப்பினர் பாலன். ஆகியோர் ஏற்பாட்டில் பழனி பாதயாத்திரை வரும் பக்தர்களுக்கு நீர் மோர். அன்னதானமும். ஒரு நாள் முழுவதும் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது இவ்விழாவில் நகரச் செயலாளர் மிதுன். மாவட்ட நிர்வாகிகள் நகர நிர்வாகிகள் சார்பணி நிர்வாகிகள் மகளிர் அணி நிர்வாகிகள் என பலர் கலந்து கொண்டனர்

இந்நிகழ்வில் தொடர்ந்து செய்தியாளர் சந்திப்பில் விழா ஏற்பாட்டினை செய்திருந்த மாவட்ட செயற்குழு உறுப்பினர் பாலன் வருகின்ற சட்டமன்ற தேர்தலில் அனைத்து இடங்களிலும் வெற்றி பெற வேண்டும். தமிழக வெற்றி கழகத்தின் நிறுவனத் தலைவர் விஜய் நீண்ட ஆரோக்கியத்துடனும் இருக்க வேண்டும் என பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கி வருகிறோம் எனக் கூறினார்

## தூத்துக்குடி திரேஸ்புரம் பகுதியில் முன்னாள் அமைச்சர் சி.த.செல்லப்பாண்டியன் நீர்மோர் பந்தலை திறந்து வைத்தார்



தூத்துக்குடி அதிமுக பொதுச் செயலாளரும் எதிர்கட்சி தலைவருமான முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி உத்தரவுப்படி வட்ட செயலாளர் ஜெனோபர் ஏற்பாட்டில் திரேஸ்புரம் சந்திப்பில் அமைக்கப்பட்ட நீர் மோர் பந்தலை மாநில வர்த்தக அணி செயலாளரும் முன்னாள் அமைச்சருமான சிதசெல்லப்பாண்டியன் திறந்து வைத்து பொது மக்களுக்கு நீர் மோர் பதநீர், தர்பூசணி பழவகைகளை பொது மக்களுக்கு வழங்கினார்.

நிகழ்ச்சியில் தெற்கு மாவட்டதுணைசெயலாளர் சந்தனம், மாவட்ட வர்த்தக அணி செயலாளர் துரைசிங், வடக்கு மாவட்ட ஜெ பேரவை இணைச் செயலாளர் ஜீவா பாண்டியன்,

மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி முன்னாள் தலைவர் ராஜகோபால், மாவட்ட மீனவணி துணைதலைவர்டெலஸ்பர், முன்னாள் மாவட்ட மீனவரணி செயலாளர் அகஸ்டின், முன்னாள் மத்திய கூட்டுறவு பண்டகசாலை தலைவர் எட்வின் பாண்டியன், முன்னாள் எம்ஜிஆர் மன்ற துணை செயலாளர் சகாயராஜ், முன்னாள் மீனவரணி இணைச் செயலாளர்ஜோசப், ஜெ பேரவை பகுதி செயலாளர் அண்டோ, முன்னாள் அரசு வழக்கறிஞர் ராஜாராம், பகுதி சிறுபான்மை பிரிவு செயலாளர் அசன், வட்ட செயலாளர்கள் சகாயராஜ், ஜெனோபர், அந்தோனிராஜ், மாவட்ட பிரதிநிதிகள், செல்லப்பா, ஜேடியம்மா முன்னாள் மேலூர் கூட்டுறவு வங்கி இயக்குனர் அன்புலிங்கம் முன்னாள் வட்ட செயலாளர் பாக்யராஜ் மோகன் மீனவர் சங்க பிரதிநிதிகள் ஜேசுராஜ் பாலன் உப்பு தொழிலாளர் சங்கம் சிவசாமி முன்னாள் யூனியன் கவுன்சிலர்கள் தருவை அமலதாசன் பழம் பெருமாள் தாய், போக்குவரத்து பிரிவு

நிர்வாகிகள் டெரன்ஸ் பெலிக்ஸ் சகாயராஜ் சங்கர் ராஜேந்திரன் பேச்சியப்பன் முருகன் சிறுபான்மை பிரிவு அனிஸ்டஸ் பிரபாகரன் மற்றும் ஸ்டாலின் அந்தோனி ராஜ் தனுஸ் அந்தோனி செல்வராஜ் ஆறுமுகம் சித்திரைவேல் மணிகண்டன் ராஜ்குமார் மகாராஜன் ஜான்சன் சுப்புராஜ் ஆபிரகாம் முனியசாமி ராஜசேகர் வெங்கடாசலம் பொன்ராஜ் ஆறுமுகம், அமைப்பு சாரா ஓட்டுநர்கள் அணி நடராஜன் மகளிர் அணியினர் ஜிபுலியா பபினாம்மா ரெக்ஸி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## தீர்க்காஜல ஈஸ்வரர் கோயிலில் பங்குனி உத்திர கல்யாண உற்சவம்; எம்பி பங்கேற்பு



திருவண்ணாமலை மாவட்டம் சேத்துப்பட்டு தாலுகா நெடுங்குணம் பகுதியில் பிரசித்தி பெற்ற பாலாம்பிகை சமேத தீர்க்காஜலாஈஸ்வரர் கோயில் அமைந்துள்ளது. இங்கு வருடந்தோறும் பங்குனி மாதத்தில் பங்குனி உத்திர திருவிழா சிறப்பாக நடைபெறுவது வழக்கம். அதன்படி நேற்று பங்குனி உத்திரம்முன்னிட்டுஅதிகாலை மூலவர்தீர்க்காஜலாஈஸ்வர் சுவாமிக்கு சிறப்பு அபிஷேக ஆராதனையும், தீபாராதனை நடைபெற்றது. அதனை தொடர்ந்து 10மணிக்குமேல் வள்ளி, தெய்வானை சமேத சுப்பிரமணி சுவாமிக்கு திருக்கல்யாண உற்சவம் நடைபெற்றது. இதனை முன்னிட்டு கோயில் வளாகத்தில் யாக வேள்வி அமைக்கப்பட்டு சிறப்பு பூஜை நடைபெற்றது. பின்னர் 12 மணிக்கு உற்சவ மூர்த்திகளுக்கு கல்யாண உற்சவம் நடந்தது. பின்னர் 2மணிக்கு மேல் ஊஞ்சல் தாலாட்டும், 4மணிக்கு மேல் மயில்வாகனத்தில் உற்சவ மூர்த்திகள் எழுந்தருளி மாடவீதி உலா சென்றார். இந்த விழாவில் ஆரணி எம்பி.எம்.எஸ். தரணிவேந்தன், ஒன்றிய செயலாளர் மனோகரன், மாவட்ட இலக்கிய அணி ஏழுமலை, சேத்துப்பட்டு நகர செயலாளர் முருகன், ஒன்றிய பொருளாளர் சசிகுமார் இளைஞர் அணி துணை அமைப்பாளர் அருண் உட்பட திரளான பக்தர்கள்கலந்துகொண்டு சுவாமியை வழிபட்டனர். முன்னதாக தெப்பல் குளத்தை எம்பி. தரணி வேந்தன் ஆய்வு செய்தார்.

## மண்பரிசோதனை செய்முறை விளக்கத்தில் பங்கேற்ற வேளாண் மாணவிகள்

ராணிப்பேட்டை மாவட்டம் காவேரிப்பாக்கம் அடுத்த சுமைதாங்கி பகுதியில் வேளாண் கல்லூரி மாணவிகள் மண் மாதிரி பரிசோதனை குறித்து செய்முறையை விவசாயிகளுக்கு விளக்கிக் கூறினர். இதில் கலவை ஆதிபராசக்தி வேளாண்மை கல்லூரி இறுதி ஆண்டு மாணவிகள் நித்யஸ்ரீ, நிவேதிதா, பவித்ரா எஸ், பவித்ரா பூமகள், பிரவீண்யா, புகழ்மதி, ராஜஸ்ரீ ஆகியோர் களப்பயிற்சியில் ஈடுபட்டனர்

இப்ப பயிற்சியில் சுமைதாங்கி பகுதி விவசாயிகளுக்கு மண் மாதிரி பரிசோதனை செய்வதன் பயன்பாடு மற்றும் மண் மாதிரி பரிசோதனையால் மண்வளத்தை காப்பது குறித்து எடுத்துரைத்தினர்

இதில் விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

12.4.2025

## ராஜபாளையத்தில் குமரிஅனந்தன் உருவபடத்திற்கு மாலை அணிவித்து காங்கிரஸ் நிர்வாகிகள் அஞ்சலி



ராஜபாளையம் ஏப்12 ராஜபாளையம் காங்கிரஸ் அலுவலகம் நேரு பவனத்தில் முன்னாள் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினருமான மறைந்த இலக்கிய செல்வர் குமரி அனந்தன் உருவ படத்திற்கு மேற்கு மாவட்ட தலைவர் ரெங்கசாமி தலைமையில் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது இந்நிகழ்ச்சியில் மாநில பொதுக்குழு உறுப்பினர்கள் பொன் சக்தி மோகன், நகர் மன்ற உறுப்பினர் சங்கர் கணேஷ்,டைகர் சம்சுதீன், வட்டார தலைவர் லட்சுமணன், தொழிற்சங்கம் வெங்கடேஷ், சக்திராஜா, அழகுராஜ் மற்றும் பலர் கலந்துகொண்டனர்

## அம்மா உணவகம் போன்று திருவடிக்குடில் உணவகம், மாற்றுத்திறனாளிகளுக்கு விலை இன்றி உணவு வழங்கப்படும் என ஆதீன மடாதிபதி அறிவிப்பு



மயிலாடுதுறை, ஏப்.12 மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை அடுத்த தருமபுரத்தில் 16ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சைவ ஆதீன திருமடம் அமைந்துள்ளது. இந்த ஆதீனத்தின் கீழ் வைத்தீஸ்வரன் கோயில், திருக்கடையூர், சட்டநாதர் ஆலயம், பரசலூர் வீரட்டேஸ்வரர் ஆலயம் உள்ளிட்ட புகழ்பெற்ற பல்வேறு தேவஸ்தானங்கள் செயல்பட்டு வருகின்றன. ஆதீன மடத்தின் 27 வது குருமகா சன்னிதானமாக ஸ்ரீ லஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரியார் சுவாமிகள் பட்டம் வகித்து வருகிறார். இவரது அறுபதாம் ஆண்டு அவதார தினத்தை முன்னிட்டு ஒரு ஆண்டு முழுவதும் பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன அதன் ஒரு பகுதியாக ஆதீன மடத்தின் சார்பில் அம்மா உணவகம் போன்று மலிவு விலை உணவகம் இன்று திறந்து வைக்கப்பட்டது. காலை சிற்றுண்டி வகைகள், மதியம் சாப்பாடு மற்றும் கலவை சாதங்கள், இரவு சிற்றுண்டி ஆகியவை பத்து ரூபாய் என்ற மிகக் குறைந்த விலையில் பொதுமக்களுக்கு வழங்கப்படுகிறது. இதனை இன்று திறந்து வைத்த ஆதீன குரு மகா சன்னிதானம் ஸ்ரீல ஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரியார் சுவாமிகள் மாற்றுத்திறனாளிகள் மற்றும் முதியவர்களுக்கு முற்றிலும் விலையின்றி உணவு வழங்கப்படும் என்று தெரிவித்தார். நிகழ்ச்சியில் ஆதீன கட்டளைத் தம்புரான் சுவாமிகள் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.

## திருவாரூர் ஒன்றியம், குன்னியூர் ஆகிய பகுதிகளில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளிகளில் வகுப்பறைக் கட்டடங்கள் திறப்பு

திருவாரூர், ஏப். 12 தமிழ்நாடு முதலமைச்சர் காணொளி காட்சி வாயிலாக பள்ளி கல்வித் துறையின் சார்பில் சிறப்பு உதவித் திட்டத்தின் கீழ் திருவாரூர் மாவட்டத்தில் நூலக கட்டடங்கள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் முத்துப்பேட்டை ஒன்றியம், குன்னலூர், குடிசேத்தி மற்றும் திருவாரூர் ஒன்றியம், குன்னியூர் ஆகிய பகுதிகளில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிகளில் வகுப்பறைக் கட்டடங்கள் அடிக்கல் நாட்டுதல் . திறந்து வைத்தார்கள்.

அந்தவகையில், திருவாரூர் மாவட்டம், திருவாரூர் ஊராட்சி ஒன்றியம், குன்னியூர் ஊராட்சியில், குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டத்தின் கீழ் குன்னியூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் ரூ.32.80 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட கூடுதல் இரண்டு வகுப்பறை கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொளி காட்சி வாயிலாக திறந்து வைக்கப்பட்டதனை திருவாரூர் மாவட்ட கலெக்டர் வ.மோகனச்சந்திரன், குத்துவிளக்கேற்றி வைத்து பார்வையிட்டனர்.

## ஈரோடு மாவட்ட கட்டிட பொறியாளர்கள் சங்க புதிய நிர்வாகிகள் பதவியேற்பு



ஈரோடு ஏப் 12 ஈரோடு மாவட்ட கட்டிட பொறியாளர்கள் சங்கத்தின் 20252026 ம் ஆண்டுக்கான புதிய நிர்வாகிகள் பதவியேற்பு விழா நடைபெற்றது . விழாவில் கடந்த ஆண்டுக்கான தலைவர் குப்புசாமி மற்றும் நிர்வாக குழுவினர் தங்களது பொறுப்புகளைபுதியநிர்வாகிகளிடம் ஒப்படைத்தனர்.

இதன் பிறகு புதிதாக தேர்வு செய்யப்பட்ட தலைவர் சம்பத்குமாருக்கு முன்னாள் தலைவர் சண்முகனும், செயலாளர் குமாரவெங்கடேஸ்வரன், பொருளாளர் மணிகண்டன் ஆகியோருக்கு முன்னாள் மாநில தலைவர் சிவலிங்கமும் பதவி பிரமாணம் செய்து வைத்தனர். அதைத்தொடர்ந்து நிர்வாகக்குழு உறுப்பினர்களுக்கு முன்னாள் மாநில தலைவர் மோகன் ராஜ். செயற்குழு உறுப்பினர்களுக்கு பட்டயதலைவர் துரைசாமி. கமிட்டி தலைவர்களுக்கு முன்னாள் தலைவர் கைலாசன் ஆகியோர் பதவி பிரமாணம் செய்து வைத்தனர்.

புதிய உறுப்பினர்களை முன்னாள் தலைவர் தேவானந்தன் சங்கத்தில் முறைப்படி இணைத்து வைத்தார். இதன் பிறகு செயற்குழு உறுப்பினர்கள் பொறுப்பேற்றுக் கொண்டனர். பெருந்துறை கண்ணன் ரெடிமிக்ஸ் நிறுவனத்தின் உரிமையாளர் ரோகித் நிகில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு பேசினார். எழுத்தாளர் ஈரோடு கதிர் மற்றும் முன்னாள் தலைவர்கள் கட்டிட பொறியாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## சோனா தொழில்நுட்பக் கல்லூரியின் 28வது ஆண்டு விழா




சேலம், ஏப்.12 சேலம் சோனா தொழில்நுட்பக் கல்லூரியின் 28 வது ஆண்டுவிழா கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. இந்த ஆண்டு விழாவிற்கு கல்லூரியின் துணைத் தலைவர்கள் சொக்குவள்ளியப்பா, தியாகுவள்ளியப்பா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கல்லூரியின் தலைவர் வள்ளியப்பா தலைமையேற்று சோனா கல்லூரியின் ஆண்டு விழா கொண்டாட்டங்களை துவக்கி வைத்தார். இதனை தொடர்ந்து கல்லூரியின் முதல்வர் எஸ்.ஆர். ஆர்.செந்தில்குமார் அனைவரையும் வரவேற்று ஆண்டு அறிக்கையை சமர்பித்தார். தேர்ச்சி சதவீதத்தின் முன்னிலை, மாணவ மாணவிகள் வேலைவாய்ப்பு பெற்றுள்ளது குறித்தும், விளையாட்டு மற்றும் பிற துறைகளில் தேசிய அளவில் சாதனைகள், தொழில்நுட்ப கருத்தரங்குகள் மற்றும் மாநாடுகள் நடத்தியதில் இந்தியாவில் முதன்மை இடம், மாணவ மாணவிகளுக்கான கல்வி உதவி மற்றும் ஊக்கத்தொகை வழங்கியது என கல்லூரியின் சாதனைகளை பட்டியலிட்டார். மேலும் கல்லூரியின் துறைசார்ந்த நடவடிக்கைகள், மற்றும் பேராசிரியர்களின் பங்களிப்பு, மாணவ மாணவிகளின் ஆராய்ச்சிகள் குறித்த கூடுதல் தகவல்களை ஆண்டு அறிக்கையாக சமர்பித்தார். இந்த விழாவில் சிறப்புவிருந்தினர்களாக சென்னை ஜி.இ வெர்னோவா நிறுவனத்தின் இந்திய மனிதவளத் தலைவர் பிரபு ஜெ.பி, மற்றும் ஹுன்டாய் மோட்டர்ஸ் நிறுவனத்தின் மேலாளர் தரணி ஜெயபால் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு ஆண்டு விழா சிறப்புரையாற்றினார்கள், மேலும் பல பிரிவுகளில் சிறப்பிடம் பிடித்தவர்களுக்கும், சிறந்து விளங்கிய கல்லூரி மாணவ மாணவியர்களுக்கு துறைவாரியாக பரிசுகளையும், சான்றிதழ்களையும் வழங்கி கௌரவித்தார்கள்.

இறுதியாக எம்.பி.ஏ துறைத்தலைவர்.அஞ்சனி நன்றியுரையாற்றினார் இந்த விழாவில் சோனா கல்வி நிறுவனத்தின் இயக்குனர் வீ.கார்த்திகேயன், முதல்வர்கள் கனகராஜ், காதர்நவாஷ், கவிதா மற்றும் பேராசிரியர்கள் ஏராளமான மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.

## 'கேங்கர்ஸ்' படத்தின் முதல் பாடல் படக்குழு அறிவிப்பு




சுந்தர்.சி இயக்கத்தில் காமெடியனாக நடிகர் வடிவேலு நடித்த படங்கள் அனைத்தும் மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பினை பெற்றவை. சுந்தர்.சி வடிவேலு இதுவரை மூன்று படங்களில் இணைந்து பணியாற்றியுள்ளனர். வின்னர் படத்தின் கைப்புள்ள, தலைநகரம் படத்தின் நாய் சேகர், நகரம் மறுப்பக்கம் படத்தின் ஸ்டைல் பாண்டி கதாபாத்திரங்கள் என்றென்றும் ரசிக்க கூடியவை.

இதற்கிடையில் 15 ஆண்டுகள் இடைவெளிக்கு பிறகு மீண்டும் இந்த கூட்டணி இணைந்துள்ளது. அதாவது, சுந்தர்.சி இயக்கத்தில் வடிவேலு 'கேங்கர்ஸ்' படத்தில் நடித்துள்ளார். இப்படத்தில் வடிவேலு மற்றும் சுந்தர். சியுடன் இணைந்து கேத்ரின் தெரசா, வாணி போஜன் மற்றும் பலர் நடித்துள்ளனர்.

இந்த படத்தில் லேடி கெட்டப்பிலும் நடித்துள்ளதாகவும் கூறப்படுகிறது. இதனால் படத்தின் மீதான எதிர்பார்ப்பு ரசிகர்கள் மத்தியில் அதிகமாகி உள்ளது. இப்படம் வருகிற 24ம் தேதி திரைக்கு வர உள்ளது. இந்த நிலையில் இப்படத்தின் முதல் பாடல்அப்டேட்வெளியாகிஇருக்கிறது.அதன்படி,'குப்பன்தொல்லைதாங்கலையே..இவன்நாளுநாளாதூங்கலையே..' என்ற பாடல் வெளியாக உள்ளது.

## ரீரிலிஸாகும் அஜித்தின் "கண்டுகொண்டேன் கண்டுகொண்டேன்"




யாருடைய உதவியும் இல்லாமல் தனியாக திரைத்துறையில் நுழைந்து தனது கடின உழைப்பினால் தனக்கென தனி அடையாளத்தை உருவாக்கி ஸ்டார் நடிகராக உருவெடுத்தவர் அஜித்.'அமராவதி' படத்தின் மூலம் கதாநாயகனான அறிமுகமான அஜித், 'ஆசை', 'காதல் கோட்டை'படங்கள்மூலம் பிரபலமானார். இவரது பல படங்கள் வரலாற்று சாதனை படைத்துள்ளது.

2000ல் வெளியான 'கண்டுகொண்டேன் கண்டுகொண்டேன்' படத்தில் அஜித்துடன் மம்மூட்டி, தபு, ஐஸ்வர்யா ராய், அப்பாஸ் என நட்சத்திர பட்டாளமே நடித்திருந்தது. இப்படத்தில் இடம்பெற்ற 'என்ன சொல்ல போகிறாய்' பாடலுக்காக பாடகர் சங்கர் மகாதேவன் சிறந்த பின்னணி பாடகருக்கான தேசிய விருதை வென்றார். ஏ. ஆர். ரகுமான் இசையமைப்பில் இடம்பெற்ற அனைத்து பாடல்களும் வரவேற்பைப் பெற்றன. திரைப்படம் தேசிய விருதை பெற்றது. இத்திரைப்படம் தெலுங்கில் மொழிமாற்றம் செய்தும் வெளியிடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் வரும் மே 1 ஆம் தேதி அஜித் குமாரின் பிறந்தநாளை முன்னிட்டு இப்படத்தைபடக்குழுரீரிலீஸ்செய்யத்திட்டமிட்டுள்ளதாகதகவல்வெளியாகியுள்ளது.

ஆதிக் ரவிச்சந்திரன் இயக்கத்தில் அஜித் குமார் நடித்துள்ள 'குட் பேட் அக்லி' இன்று திரையரங்குகளில் வெளியாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.

## விஜய் சேதுபதியின் புதிய படத்தில் இணைந்த நடிகை தபு



தமிழ் சினிமாவின் முன்னணி நடிகர்களில் ஒருவர் விஜய் சேதுபதி. இவர் விடுதலை 2 படத்தை தொடர்ந்து மிஷ்கின் இயக்கத்தில் 'டிரெயின்' படத்திலும், ஆறுமுக குமார் இயக்கத்தில் 'ஏஸ்' படத்திலும் நடித்து முடித்துள்ளார். இந்த இரண்டு படங்கள் அடுத்தடுத்து வெளியாக உள்ளன.மேலும் 'கடைக்குட்டி சிங்கம், எதற்கும் துணிந்தவன்' போன்ற படங்களை இயக்கிய பாண்டிராஜ் இயக்கத்தில் புதிய படத்தில் நடித்து வருகிறார்.

இதற்கிடையில், பிசினஸ்மேன், டெம்பர், லிகர், டபுள் இஸ்மார்ட்' உள்ளிட்ட படங்களை இயக்கிய பூரி ஜெகன்நாத் இயக்கத்தில் புதிய படம் ஒன்றில் விஜய் சேதுபதி நடிக்க உள்ளார். பான் இந்திய அளவில் தயாராக உள்ள இப்படத்தை நடிகை சார்மி கவுர் தயாரிக்க உள்ளார்.

இந்நிலையில், இப்படத்தில் நடிகை தபு முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்க உள்ளதாக படக்குழு அறிவித்துள்ளது. தனித்துவமான கதைத் தேர்வுகளுக்கு பெயர் பெற்ற தபு, இந்த படத்தின் கதாபாத்திரத்தாலும், அழுத்தமான கதைக்களத்தாலும் உடனடியாக ஈர்க்கப்பட்டு இந்த படத்தில் நடிக்க, உடனடியாக ஒப்புக்கொண்டுள்ளார். இந்த படத்தில் அவரது பாத்திரம் ரசிகர்கள் அனைவரையும் ஈர்க்கும்.

"மாச்சிஸ்" (1996) மற்றும் "சாந்தினி பார்" (2001) ஆகிய படங்களில் நடித்ததற்காக சிறந்த நடிகைக்கான தேசிய விருதை தபு வென்றது குறிப்பிடத்தக்கது.

## கே.எல்.ராகுல் அபாரம்: பெங்களூரு அணியை வீழ்த்தி டெல்லி வெற்றி



ஐ.பி.எல். தொடரின் 18வது சீசன் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இதில் பெங்களூருவில் இன்று நடைபெற்ற ஆட்டத்தில் டெல்லி கேப்பிடல்ஸ் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணிகள் மோதின. இதில் டாஸ் வென்ற டெல்லி அணியின் கேப்டன் அக்சர் படேல் பந்துவீச்சை தேர்வு செய்தார்.

அதன்படி முதலில் பேட்டிங் செய்த பெங்களூரு அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக விராட் கோலி பில் சால்ட் ஆகியோர் களமிறங்கினர். இதில் பில் சால்ட் ஆரம்பம் முதலே அதிரடியில் வெளுத்து வாங்கினார். ஸ்டார்க் வீசிய ஆட்டத்தின் 3வது ஓவரில் மட்டும் எக்ஸ்டிரா உட்பட 30 ரன்கள் வந்தது. இதனால் பெங்களூரு அணி 3 ஓவர்களிலேயே 50 ரன்களை கடந்தது. இதனால் பெங்களூரு அணி இமாலய ரன் குவிக்கும் என்று அனைவரும் நினைத்தனர். ஆனால் பில் சால்ட் (37 ரன்கள்) ஒரு ரன்னுக்கு ஆசைப்பட்டு ஓடி ரன் அவுட் ஆனார். அத்துடன் ஆட்டத்தின் போக்கு மாறியது.

இதன்படி பெங்களூரு அணி வரிசையாக விக்கெட்டுகளை பறிகொடுத்தது. படிக்கல் ஒரு ரன்னிலும், விராட் கோலி 22 ரன்களிலும் ஆட்டமிழந்தனர். அடுத்து வந்த வீரர்களும் பெரிய அளவில் ரன் அடிக்காததால் பெங்களூரு அணி தடுமாறியது. டெல்லி அணியின் பந்துவீச்சாளர்கள் சிறப்பாக பந்துவீசி பெங்களூருவுக்கு நெருக்கடி கொடுத்தனர். லிவிங்ஸ்டன் 4 ரன்களிலும், ஜிதேஷ் சர்மா 3 ரன்களிலும், படிதார் 25 ரன்களிலும் ஆட்டமிழந்தனர். இருப்பினும் இறுதி கட்டத்தில் டிம் டேவிட் (37 ரன்கள்) அதிரடியாக விளையாடி பெங்களூரு அணி நல்ல நிலையை எட்ட உதவினார். இவரின் அதிரடியால் பெங்களூரு அணி 20 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்டுகளை இழந்து 163 ரன்கள் அடித்தது. டெல்லி தரப்பில் அதிகபட்சமாக குல்தீப் யாதவ் மற்றும் விப்ராஜ் நிகாம் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகள் வீழ்த்தினர்.

இதனையடுத்து 164 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் டெல்லி அணியின் சார்பில் டு பிளஸ்சிஸ் மற்றும் ஜாக் ஆகியோர் களமிறங்கினர். தொடக்கமே டெல்லி அணிக்கு சோதனையாக அமைந்தது. டு பிளஸ்சிஸ் 2 ரன்னில் வெளியேற, அவரைத்தொடர்ந்து ஜாக் 7 ரன்னும், அடுத்து களமிறங்கிய அபிஷேக் போரல் 7 ரன்னும், அக்சர் பட்டேல் 15 ரன்களும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

அடுத்ததாக கே.எல்.ராகுலுடன், ஸ்டப்ஸ் ஜோடி சேர்ந்தார். சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி ரன்கள் சேர்த்த இந்த ஜோடியில் கே.எல்.ராகுல் 37 பந்துகளில் தனது அரை சதத்தை பதிவு செய்தார். பின்னர் இந்த ஜோடி அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தி ரன்களை சேர்க்கத் தொடங்கியது. இதனால் டெல்லி அணியின் ரன் ரேட் வேகமாக உயர்ந்தது. விக்கெட்டுகளை வீழ்த்த பெங்களூரு அணி வீரர்கள் எடுத்த முயற்சிகள் அனைத்தும் தோல்வியில் முடிந்தது.

முடிவில் கே.எல்.ராகுல் 93 (53) ரன்களும், ஸ்டப்ஸ் 38 (23) ரன்களும் எடுத்து கடைசிவரை ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர். இறுதியில் டெல்லி அணி 17.5 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து 169 ரன்கள் எடுத்தது. பெங்களூரு அணியின் சார்பில் அதிகபட்சமாக புவனேஸ்வர் குமார் 2 விக்கெட்டுகளும், யாஸ் தயாள் மற்றும் சுயாஸ் சர்மா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டும் வீழ்த்தினர்.

இதன்மூலம் பெங்களூரு அணிக்கு எதிரான போட்டியில் 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் டெல்லி அணி வெற்றிபெற்றது. இதன்படி டெல்லி அணி 8 புள்ளிகளுடன் 4வது தொடர் வெற்றியை பதிவு செய்து அசத்தியது.

## ஐ.பி.எல் 2025: சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்கு மீண்டும் தோனி கேப்டன்



ஐ.பி.எல். தொடரின் 18வது சீசன் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இதில் 5 முறை சாம்பியனான சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் கேப்டனாக ருதுராஜ் கெய்க்வாட் செயல்பட்டார். அவரது தலைமையில் விளையாடிய சென்னை அணி நடப்பு சீசனில் 5 லீக் போட்டிகளில் ஒன்றில் மட்டுமே வெற்றி கண்டு புள்ளி பட்டியலில் 9வது இடத்தில் உள்ளது. இந்நிலையில் முழங்கை எலும்பு முறிவு காரணமாக நடப்பு சீசனிலிருந்து ருதுராஜ் கெய்க்வாட் விலகியுள்ளார். இதனையடுத்து சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் புதிய கேப்டனாக மகேந்திரசிங் தோனி நியமிக்கப்பட்டுள்ளார். இதனை சென்னை அணியின் பயிற்சியாளர் ஸ்டீபன் பிளெமிங் அறிவித்துள்ளார்.

நடைபெற உள்ள கொல்கத்தாவுக்கு எதிரான போட்டியிலிருந்து தோனி கேப்டனாக செயல்பட உள்ளார். இது சென்னை அணிக்கு நிச்சயம் வலுவானதாக அமையும். ஏனெனில் கடந்த காலங்களில் சென்னை அணி தோனி தலைமையிலேயே 5 கோப்பைகளையும் வென்றுள்ளது. மேலும் இவரது தலைமையில் வெற்றிகரமாகவும் செயல்பட்டுள்ளது. கடந்த சீசனில் சென்னை அணியின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு கேப்டன் பொறுப்பை ருதுராஜ் கையில் ஒப்படைத்த தோனி சாதாரண விக்கெட் கீப்பர் பேட்ஸ்மேனாக விளையாடி வந்தார்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.